**தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்றும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

1.6 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

1.6.1 **நிதி செயலாற்றல் கூற்று**

**(அ) வருமான பெறுவனவுகள்**

திணைக்களத்திற்குரிய வருமானப் பெறுவனவுகளை கணக்கீடு செய்தல் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பர் 09 அன்று அலங்கார மீன்களின் மீள் ஏற்றுமதிக்கான உரிமங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 20,000 தொகை வருமானத்துடன் சேர்க்கப்படுவதற்குப் பதிலாக, பொது வைப்புக் கணக்கில் வைப்புத் தொகையாகக் கணக்கீடு செய்யப்பட் டிருந்ததால், வருமானம் ரூபா 20,000 ஆல் குறைவாகக் குறிப்பிடப்பட்டி ருந்தது. | அலங்கார மீன்களின் மீள் ஏற்றுமதிக்காக 2021.12.09 அன்று, Ominta Aquarium International இனால் ரூபா 10,000 மட்டுமே செலுத்தப்பட்டது. அதற் காக இந்த நிறுவனத் தால் NAQDA நிறுவனத் திடமிருந்து பெறவேண் டிய, பரிந்துரை பெறப்ப டாததால் உரிமம் வழங் கப்படவில்லை. அதன்படி, அந்த பெறுவனவு பொது வைப்பு கணக்கில் செலவு வைக்கப்பட்டு ள்ளது. | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்ப டுதல் வேண்டும். |
| (ii) | 2021 திசெம்பர் 31 ஆம் தேதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களிலு ள்ள நிலுவை வருமான அறிக்கையின் (ACA-1(i)) படி, 2018 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 ஆம் தேதி வரை படகுகளை பதிவு செய்ததில் இருந்து கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 123,000 ஆன போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட | அவதானிப்புடன் இணங்குகிறோம் | நிதிக்கூற்றுக்களில் நிலுவை வருமானம் சரியாக சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை வருமான அறிக்கையின் படி நிலுவையான மொத்த வருமானம் ரூபா 278,000 எனக் காட்டப்பட்டதன் காரணமாக ரூபா 155,000 வேறுபாடொன்று நிதிக் கூற்றுக்களில் காணப்பட்டது. | | |
| (iii) | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிலுவை வருமானக் கூற்றின் ACA-1(i) இன் படி, 2021 சனவரி 01 இல் உள்ளவாறான ஆரம்ப நிலுவை வருமான மீதி ரூபா 8,381,000 ஆன போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமான அறிக்கையின் படி, அந்த மீதி ரூபா 4,437,199 ஆகக் காணப்பட்டமையால், 2021 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதி ரூபா 3,943,801 அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டின் இறுதியில் பச்சை மீன்கள் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதிக்கான உரிமங்களை வழங்கியமைக்காக பெறவேண்டிய ரூபா 4,151,199 நிலுவை வருமானத்திற்குப் பதிலாக ரூபா 8,250,000 நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தமையே அதற்கான காரணம் என கண்டறியப் பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | தவறுதலாக இடம்பெற்றுள்ளதுடன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், அந்தப் பிழை திருத்தப்பட்டு, பச்சை மீன் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதிக்கான உரிமங்களை வழங்குவதற்கான கட்டணம் என ரூபா 8,250,000 காண்பிக்கப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்ட மாற்றங்கள் வெளிப்ப டுத்தப்பட வேண்டும். |
| (iv) | 2020 திசெம்பர் 23 அன்று மாஸ் லங்கா இன்ஸ்டிடியூட் இனால் பச்சை மீன்களை ஏற்றுமதி செய்வதற்காக நிகழ்நிலை மூலம் செலுத்திய ரூபா 100,000 தொகைக்குரிய உரிமம், முகாமைத்துவப் பிரிவால் வழங்கப்பட்டிருக்கையில் அத்தொகை அந்த ஆண்டின் வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாது 2021 ஆம் ஆண்டின் வருமானமானமாக எடுக்கப்பட்டிருந்தமையால் அந்த ஆண்டின் வருமானம் ரூபா 100,000 இனால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 175(1)(ஆ) இன் படி, ஒவ்வொரு நபரிடமிருந்தும் பெறப்பட வேண்டிய தொகைக்குரிய பதிவேடு பேணப்பட்டு நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் பணம் வசூலிக்கப்பட்டது என்பது உறுதிப் படுத்தப்படாமையால் இந்தத் தொகையிலிருந்து எவ்வளவு மீளாய்வாண்டில் | நி.பி. 175(1)(ஆ) இன்படி, ஒவ்வொரு நபரிடமிருந் தும் பெறப்பட வேண்டிய தொகைக்குரிய பதிவேடுகளை பராமரித்து உரிய முறையில் பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேகரிக்கப்பட்டது என்பதை அடையா ளம் காண முடிந்திருக்கவில்லை. | | |
| (v) | திறைசேரி கணனி அச்சுப் பிரதியின் படி, மொத்த வரி வருவாய் ரூபா 64,606,538 ஆனதுடன், அந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்களிற்கு சமப்படும் வகையில் திணைக்களத்தின் பதிவேடு கள் மாற்றப்பட்டிருந்த போதிலும், அந்த மாற்றங்கள் எதுவும் பொறுப்பான அதிகாரியால் சான்றளிக் கப்பட்டிருக்கவில்லை. | சிகாஸ் கணினி நிகழ்ச் சித்திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்பட்ட ரூபா 64,606,538 வருமானம் சரியானது என்பது திறைசேரி கணனி அச்சுப் பிரதியின் படி உறுதிப்படு த்தப்பட்டுள்ளது. | மாற்றங்கள் செய்யப் பட்டு அது குறித்து பொறுப்பு வாய்ந்த அதிகாரியால் சான்ற ளிக்கப்பட வேண்டும். |
| (vi) | 2021 ஆம் ஆண்டில், கடல் அட்டைகள் ஏற்றுமதி உரிம வருமானமாக நிதிப் பிரிவிற்கு கிடைத்திருந்த பெறுவனவுகளின் மொத்தத் தொகை ரூபா 4,882,500 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவப் பிரிவால் கணக்காய் விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்க ளின் படி, கடல் அட்டைகள் ஏற்றுமதி உரிமத்தின் வருமானம் ரூபா ரூபா 4,912,500 ஆனமையால் ரூபா 30,500 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதி முறைகேடு எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை | அனைத்து பிரிவுகளி டையிலும் முறை யான ஒருங்கிணைப் புக் காணப்படுதல் வேண்டும். |
| (vii) | மீளாய்வாண்டின் 07 வகையான வருமானங்களுக்காக ஒவ்வொரு பிரிவாலும் உரிமங்கள் வழங்கப்பட் டிருந்த போதிலும், அந்த வருமானம் நிதிப் பிரிவின் ஆவணங்களுடன் பொருந்தாதிருப்பதற்கான காரணங் களை இனங்காண முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதுகுறித்து சம்பந்தப்ப ட்ட பிரிவுகளுடன் ஆலோ சித்து, பதிவேடுகளை முறையாக பராமரிக்க அறிவுறுத்தப்பட்டது. | அனைத்து பிரிவுகளி டையிலும் முறை யான ஒருங்கிணைப் புக் காணப்படுதல் வேண்டும். |

**(ஆ) மூலதனச் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி செயலாற்றல் அறிக்கை மற்றும் திறைசேரியின் அச்சுப் பிரதி SA 82 இன் படி மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல் இன் கீழ் ரூபா 16,574,347 காட்டப்பட்டுள்ள போதிலும், ACA-6 நடைமுறை அல்லாத சொத்துகளின் அறிக்கையில், மூலதன சொத்து மொத்தக் கொள்வனவு ரூபா 289,986,291 எனக் காணப்பட்டமையால் ரூபா 273,411,944 அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | திறைசேரியின் அச்சுப் பிரதி SA 82 பொழிப்பில் குறிப்பிடப்பட்டு ள்ள மூலதனச் சொத்துக்கள் கையகப்படுத்தல் இன் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 16,574,347 பெறுமதியானது ACA 6 ஆவது குறிப்பில் மீளாய்வாண்டின் கொள்வனவின் கீழ் சரியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. | மூலதனச் சொத்து க்களை திறைசேரி யின் அச்சுப் பிரதியுடன் ஒப்பிட்டு சரியான மீதியை சமர்ப்பித்தல் வேண்டும். |

**(இ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| படகுக் கண்காணிப்பு பிரிவின் விரிவாக்க முற்பண மீதியான ரூபா 8,518,925 தொகையை 2019 ஆம் ஆண்டில் அறவிடுதல் குறித்து திணைக்களத்தினால் திறைசேரிக்கு அறிவித்திருக்காமையால் திறைசேரிப் புத்தகங்களில் (SA-90) 9189 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் இத்தொகை 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது. இருப்பினும், திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டிலும் கூட இதனை திறைசேரி புத்தகங்களுடன் ஒப்பிட்டு திருத்தப்பட்டிருவில்லை. | இந்த மீதியை இவ்வாண்டில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்களை பொதுத் திறைசேரிக்கு சரியாக அறிவித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களுடன் கூடிய திருத்தப்பட்ட வருவாய் மதிப்பீட்டிற்கும் உண்மையான வருவாய் இற்கும் இடையே உள்ள முரண்களுக்கான விளக்கமளித்தல் படிவத்தில் ரூபா 64,573,638 உள்ளபடியான வருவாய்க்கும் ரூபா 43,000,000 மதிப்பீட்டு வருவாய்க்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்காக தரப்பட்டுள்ள காரணங்கள் நியாயமானவை அல்ல என்பதுடன், திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் காரணமாக உரிம வருமானம் அதிகளவில் பெறப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அதிகளவான உரிமம் புதுப்பித்தல்கள் திசெம்பர் மாதத்தில் ஏற்பட்டதன் காரணமாக திசெம்பரில் வருமானம் அதிகரித்திருந்த போதிலும் ரூபா 21,606,538 அல்லது 50 சதவீத மிகைகளிற்காக கூறப்பட்ட காரணங்கள் நியாயமானவை அல்ல என்பது அவதானிக்கப்பட்டது. | 2021 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில நாட்டில் ஓரளவு நல்ல சூழ்நிலை உருவாகியதன் காரணமாகவும், 2021.11.24 அன்று வெளியிடப்பட்ட 2255/22 ஆம் இலக்க புதிய வர்த்தமானி அறிவித்தல் காரணமாகவும் உண்மையான வருமானம் அதிகரித்துள்ளது. | வருமானங்களை திருத்தமாக மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், உள்ளபடியான வருமானத்திற்கும் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டிற்கான காரணங்களை சரியாக இனங்காண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருமான மதிப்பீடுகளைத் தயாரிக்கையில் முடிந்தளவு யதார்த்தமான மற்றும் நியாயமான பெறுமதிகளை உள்ளடக்க வேண்டுமென 2020 மே 28 ஆந் தேதியிட்ட TOD/Rev/M2/01 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடுகளைத் தயாரிப்பது தொடர்பான கடிதத்தின் 02 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டுக்குமான வருமான மதிப்பீடுகளை தயாரிக்கையில் அந்த விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறைபாடுகளைக் குறைக்கும் வகையிலும், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவும் செயற்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக செயற்படுதல் வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் பிரதம கணக்காளர் இனால் பற்றாக்குறை அல்லது அதிக வருமானத்திற்கான காரணங்களை தெரிவிக்குமாறு கோரி அதிகாரிகளுக்கு வழங்கிய கடிதங்களின்படி, 2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 43,206,000 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 43,000,000 ஆனமையால் ரூபா 206,000 வித்தியாசமும் மேற்படி வரிசைகளின் படி உண்மையான வருமானம் ரூபா 64,819,638 ஆன போதிலும், நிதிக் கூற்றுக்களில் உண்மையான வருமானம் ரூபா 64,573,638 எனக் காட்டப்பட்டதன் காரணமாக ரூபா 246,000 வித்தியாசமும் அவதானிக்கப்பட்டது. ஆனால் இதற்கான காரணங்கள் அவதானிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் சரியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. | திருத்திய வருமான மதிப்பீட்டையும் உள்ள படியான வருமானத்தையும் சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு, ACA-1(i) நிலுவை வருமான கூற்றின் படி நிலுவை வருமானம் ரூபா 8,605,000 ஆகக் காணப்பட்டதுடன், அறவிடப்பட்ட நிலுவை வருமானத் தொகை ரூபா 42,000 ஆனமையால் நிலுவை வருமானத்தை அறவிடும் செயல் முன்னேற்றம் ஏறத்தாழ 0.5 சதவீத அளவிற்கு மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது. | பச்சை மீன்கள் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீன் ஏற்றுமதிக்கான உரிமங்களை வழங்கியமைக்காக பெறவேண்டிய ரூபா 8.25 மில்லியன் வசூலிக்க முடியாத வருமானம் ஆகும். ஏனைய வருமான நிலுவைகளை வசூலிக்க சம்பந்தப்பட்ட பிரிவுகளிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 4 செலவின விடயங்களிற்குரிய ரூபா 19,500,000 தொகையான மொத்த தேறிய நிதி ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிரு ந்ததுடன், 5 செலவின விடயங்களிற்குரிய சேமிப்புகள் தேறிய நிதி ஒதுக்கீட்டில் 25 சதவீதம் முதல் 81 சதவீதம் வரை காணப்பட்டது. | பொதுத் திறைசேரியால் பாதீட்டு மதிப்பீடுகள் திருத்தப்படாமை யால் அந்த சேமிப்புக்கள் திணைக்களத்தின் சேமிப்பாகக் காண்பிக்கப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (ஆ) 2 செலவின விடயங்களிற்குரிய உண்மை யான செலவினங்களைக் கருத்தில் கொள்கையில், வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு போதுமானதாக இருந்த போதிலும், ரூபா 500,000 நிதி ஒதுக்கீடு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டு செலவழிக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. | உரிய வேளையில் கொடுப்ப னவுக்காக உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய திட்டமொ ன்றின் ஊடாக நிதி ஏற்பாடுகள் மாற்றப்பட வேண் டும். |
| (இ) மதிப்பீட்டைத் தயாரிப்பதில் காணப்பட்ட பலவீனம் காரணமாக, இரண்டு செலவின விடயங்களிற்காக முறையே 100 சதவீதம் மற்றும் 131 சதவீதம் குறைநிரப்பு ஒதுக்கீடுகள் மூலம் மொத்தம் ரூபா 23,100,000 நிதி ஏற்பாடு பெறப்பட்டு அதில் எஞ்சியிருந்த ரூபா 3,600,000 தொகை ஏனைய இரண்டு செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. | செலவுகள் சிக்கனமாக மேற்கொள்ளப்பட்டமையாலும் நாடு தற்காலிகமாக மூடப்பட் டமையாலும் நிதி ஏற்பாடுகள் ஓரளவு சேமிப்பானதுடன் சட்ட விரோத கடற்றொழில் சுற்றி வளைப்புகளிற்கான உறுதிச் சீட்டுகள் தாமதமாக சமர்ப்பிக்கப் பட்டமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதுடன் அவை நி.பி. 66 இன் கீழ் மாற்றப்பட்டது. | உரிய திட்டமொ ன்றின் ஊடாக நிதி ஏற்பாடுகள் மாற்றப்பட வேண் டும். |

## 2.3 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

வங்கிக் கணக்குகளை செயற்படுத்துதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் காணப்பட்ட மொத்தம் ரூபா 13,221,325 தொகையான 43 காலங்கடந்த காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 396 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நிதிப் பிரமாணம் 396 இன் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2021 சனவரி முதல் திசெம்பர் வரையான 09 சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய தேறாத வைப்புக்களின் மொத்தம் ரூபா 17,280 தொகையையும், 39 சந்தர்ப்பங்களிற்குரிய ரூபா 942,670 இனங்காணப்படாத பெறுவனவுகளையும் இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நிதிப் பிரமாணம் 396 இன் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2021 சனவரி மற்றும் திசெம்பர் மாதங்களிற்குரிய இரண்டு சந்தர்ப்பங்களில் இனங்காணப்படாத ரூபா 18,500 கொடுப்பனவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நிதிப் பிரமாணம் 396 இன் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் பொது நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 14 ஆம் இலக்க வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி 2021 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையை தயாரித்துச் சமர்ப்பிதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தி மீன்களின் இனவிருத்தியை அதிகரிக்கும் நோக்கில் திருகோணமலை, யாழ்ப்பாணம், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் கைவிடப்பட்ட மீன்பிடி படகுகள், பேருந்துகள் மற்றும் புகையிரத வண்டிகளை மூழ்கடித்து கடல் சூழலை மேம்படுத்தும் செயற்திட்டம் 2020 யூலையில் ஆரம்பிக்கப்பட்டு 2021 திசெம்பரில் பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக முந்தைய ஆண்டிலும் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிலும் துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 18,274,800 தொகையும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ரூபா 10,952,406 | இலங்கையின் வர்த்தக மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சின் பணிப்பாளரிடம் தேவையான பூர்வாங்க பணிகளை மேற்கொள்ளுமாறும், கடற்பரப்பின் இடங்களை வரைபடமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்களை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், கடற்படைத் தளபதியுடன் இடம் பெற்ற பல கலந்துரையாடல்களின் போது முடிக்கப்பட்ட செயற்திட்டங்களின் தொடர்பு | இச்செயற்திட்டத்தின் நோக்கங்கள் எட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்ய பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

தொகையும் செலுத்தப்பட்டது. ஆனால் இந்த செயற்திட்டம் வெற்றியடைவதற்கான எந்த ஒரு பின்தொடர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

டைய பகுதிகளை அவதானித்து அறிக்கையை வழங்குமாறு வாய் மொழி ரீதியாக கோரிக்கைகள் விடுக்கப் பட்டுள்ளன.